**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.150/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | லதா | Prosecution | LW-2 as PW1. |
| Father Name | க/பெ.நீலமேகம் | Defence | |
| Village | கதிராமங்களம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 43/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**<u>27.02.2026</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி 3 மகள்கள் மற்றும் 1 மகன் பிறந்தார்கள். அதில் ப.சா.1 ஜெயசீலன் எனது மகன் ஆவார். எனது மகன் தற்போது உயிருடன் இல்லை அவர் கடந்த ஒன்றறை வருடங்களுக்கு முன்பு விபத்தில் இறந்துவிட்டார். ப.சா.3 நீலமேகம் எனது கணவர் ஆவார். இந்த வழக்கின் எதிரிகள் ரகுவரன் மற்றும் ராஜேஷ் குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள்.

கடந்த 2வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை ஒரு நாள் மாலை சுமார் 6.00 மணியளவில் கொண்டத்தூரில் உள்ள விவசாய நிலதிற்கு நடவு நடுவதற்க்காக சென்றிருந்தேன். நான் வேலை முடித்துவிட்டு சம்பளம் பெற்று வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருந்தேன். அப்போது எங்கள் தெருவில் ஒரே சத்தமாக சண்டை நடந்து கொண்டிருந்தது. எனது மூன்று பெண் பிள்ளைகளும் அழுது கொண்டே என்னிடம் வந்து தனது அண்ணன் ஜெயசீலனை கன்னிக்கோயில் அருகில் ரகுவரன் அடித்துவிட்டதாக கூறினர். நான் அழுது கொண்டே எனது வீட்டு வாசலில் அமர்ந்திருந்தேன்.

அப்போது எதிரிகள் இருவரும் வந்து என்னை தாக்கினார்கள் . அதில் எதிரி ரகுவரன் என்னை கீழே தள்ளி உதைத்து எனது ஆடையை கிழித்தார். அவர்கள் அடித்ததில் நான் மயங்கிவிட்டேன். அருகில் இருந்தவர்கள் ஆட்டோவின் மூலம் சீர்காழி GHக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகளுக்கும் எனது மகனுக்கும் என்ன பிரச்சனை நடந்தது என்றால் அவர்கள் கிரிக்கெட் விளையாடும் போது ஏற்பட்ட தகறாறு தான் காரணம்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.150/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | நீலமேகம் | Prosecution | LW-3 as PW4. |
| Father Name | சிங்காரம் | Defence | |
| Village | கதிராமங்களம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 55/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**27.02.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது மனைவி ஆவார். ஜெயசீலன் எனது மகன் ஆவார். அவர் தற்போது உயிருடன் இல்லை. இந்த வழக்கின் எதிரிகள் ரகுவரன், ராஜேஷ்குமாரை எனக்கு தெரியும். அவர்கள் எனது தெருவை சேர்ந்தவர்கள். ஏற்கனவே சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் கிரிக்கெட் நடந்த இடத்தில் எனது மகனுக்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்தது. அன்றைய தினம் மாலை எங்கள் வீட்டிற்கு வெளியே வந்து நின்று எதிரிகள் குச்சிக்காரி மகனே, தேவுடியா மகனே என்று தரக்குறைவான வார்த்தைகளால் எனது மகனை திட்டினார்கள்.

கடந்த **30.05.2023** ம் தேதி மாலை **6.00** மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். எங்கள் வீட்டிற்கு வழியாக சென்றவர்கள் எனது மகனை எதிரிகள் தாக்குவதாக தெரிவித்தார்கள். நான் எனது வீட்டில் இருந்து ஓடிக்கொண்டிருக்கும் போது பார்த்தேன். எதிரி ராஜேஷ்குமார் எனது மகனை இறுக பிடிக்க எதிரி ரகுவரன் இரும்பு பைப்பால் எனது மகனை வலது கையில் தாக்கினார் எதிரி தாக்கியதில் எனது மகனுக்கு வலது கை கட்டை விரல் உடைந்து எலும்பு வெளியே தெரிந்தது. எனது மகன் கீழே

விழுந்தவுடன் எதிரிகள் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டனர். எதிரிகள் அந்த இடத்தை விட்டு ஓடும் போது "உன்னை வெட்ட வேண்டும் என்று நினைத்தோம் ஆனால் நீ தப்பித்துக்கொண்டாய்" என்று மேலும் திட்டிக்கொண்டே ஓடினார்கள். நான் எனது மகனை ஆட்டோவின் மூலம் சீர்காழிGhக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். நடந்தது இது தான்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துக்கொள்ளப்பட்டது.**